**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**மோ.வா.வி.கோ.மனு எண். 110 /2019**

பெயர் – நைனார்பிள்ளை ம.சா.1

த/பெ –

கிராமம் –

தாலுகா –

தொழில் –

ஜாதி –

மதம் –

வயது –

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2022ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை : –**

நான் இந்த மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

1. ஆரல்வாய்மொழி காவல் நிலைய குற்ற எண்.324/2018 கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ஆவணத்தின் நம்பகத்தன்மை நிரூபிக்கும்பொருட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது என ஆட்சேபனை செய்யப்படுகிறது. **ம.சா.ஆ.1.**

2. பார்வை மகஜர் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ஆவணத்தின் நம்பகத்தன்மை நிரூபிக்கும் பொருட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது என ஆட்சேபனை செய்யப்படுகிறது. **ம.சா.ஆ.2**

3. மாதிரி வரைபடம் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ஆவணத்தின் நம்பகத்தன்மை நிரூபிக்கும் பொருட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது என ஆட்சேபனை செய்யப்படுகிறது. **ம.சா.ஆ.3.**

4. TN 74 B 7250 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4.**

5. குற்ற அறிக்கை கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ஆவணத்தின் நம்பகத்தன்மை நிரூபிக்கும்பொருட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது என ஆட்சேபனை செய்யப்படுகிறது. **ம.சா.ஆ.5.**

6. குற்ற வழக்கில் அபராதம் செலுத்த பிறப்பித்த உத்தரவு கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ஆவணத்தின் நம்பகத்தன்மை நிரூபிக்கும்பொருட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது என ஆட்சேபனை செய்யப்படுகிறது. **ம.சா.ஆ.6.**

7. காயச்சான்று கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் ஆவணத்தின் நம்பகத்தன்மை நிரூபிக்கும்பொருட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது என ஆட்சேபனை செய்யப்படுகிறது. **ம.சா.ஆ.7**

8. நாகர்கோவில் சபரீஷ் எலும்பு முறிவு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட வகையில் ஏற்பட்ட செலவினங்களுக்கான ரசீது ரூ.83,960/–க்குரியது **ம.சா.ஆ.8.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

9. நாகர்கோவில் சபரீஷ் எலும்பு முறிவு மருத்துவமனையில் இரத்தம் வாங்கிய இரத்த வங்கி ரசீது ரூ.3,900/–க்குரியது **ம.சா.ஆ.9.** (ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடிது என ஆட்சேபிக்கப்பட்டு ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

10. நாகர்கோவில் சபரீஷ் எலும்பு முறிவு மருத்துவமனை வழங்கிய விடுவிப்பு சான்று **ம.சா.ஆ.10.**

11. மருந்துச்சீட்டு **ம.சா.ஆ.11.**

12. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.12.**

13. எனது வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட நகல் **ம.சா.ஆ.13.**

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து காலை 5.30 மணிக்கு நடந்தது. அப்போது இருட்டாக இருந்தது என்றால்

சரிதான். செண்பகராமன் புதூர் ரோட்டில் போய்க்கொண்டிருந்த போது விபத்து நடந்தது. இருட்டாக இருந்ததாலும், எனக்கு கண்பார்வை தெளிவாக இல்லாததாலும் குறுக்கும் நெடுக்குமாக இருந்ததாலும் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் வாகனம் மெதுவாக வந்தது என்றால் சரியல்ல. நான் குறுக்கும் நெடுக்குமாக வந்ததால் என் மீது மோதி விடக்கூடாது என்பதற்காக 1ம் எதிர்மனுதார் ஓட்டுநர் ரோட்டின் இடது புறம் திருப்பும் போது நான் அந்த வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகவிட்டது என்றால் சரிதான் ஆனால் வலி உள்ளது. நான் தாக்கல் செய்த மருத்துவ பில்கள், மருத்துவமனை ரசீதுகள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் விபத்து சமயத்தில் பதிவு சான்று இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதார் ஓட்டுநர் பதிவு சான்று இல்லாமல் வாகனத்தை ஓட்டி சென்றதால் அவர் காப்பீட்டு விதிமீறல் செய்துள்ளார் ஆகவே 2ம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரிய இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் காப்பீட்டு விதிமீறல் செய்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை